ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2086/37 - 2018 අගෝස්තු මස 31 වැනි සිකුරාදා - 2018.08.31
*2086/37 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**ச.வ.பி. 9/2016**

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம், 118 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
*2018, ஓகத்து 29.*

**ஒழுங்குவிதிகள்**

*2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 2049/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதிய 1989/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க விலைகளின் மீதான உச்சவரம்பு ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-*

*(1)* அதன் 3 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"3. அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்கள் தொடர்பில் அதிகபட்ச சில்லறை விலையின் (இதனகத்துப்பின்னர் "அசிவி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) வரையறைகள், அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்களின் எல்லா வணிகப்பெயர்களுக்கும், (Brand names) இனப்பெயர்களுக்கும் (Generic names), மருந்தின் தன்மைகளுக்கும் (Dosage froms), வீரியங்களுக்கும் (Strenghs) ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்."

*(2)* ஐந்தாம் ஒழுங்குவிதியை உடனடுத்து, ஒழுங்குவிதி 5அ எனப் பயனுறவேண்டிய பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலமும்:-

"5அ. இவ்வொழுங்குவிதி நடைமுறைக்குவரும் தேதியன்றும் அத்தேதிக்குப் பின்னரும் இதற்கான அட்டவணையின் பாகம் II இல் குறித்துரைக்கப்பட்டவாறான அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதத்தை விற்பனை செய்யும் நோக்கத்துக்காக அத்தகைய

1A-PG 4189 - 807 (2018/08)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

அவுடதத்தை தனதுடைமையில் வைத்திருக்கின்ற ஓர் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், வியாபாரி, விநியோகிப்பாளர், மருந்தாளர், மருத்துவத் தொழிலர், ஒரு தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட மருத்துவ நிறுவனம், மருந்தகம் அல்லது ஆள் சொல்லப்பட்ட அட்டவணைகளின் நிரை V இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதிகபட்ச சில்லறை விலைக்கு மேலாக அத்தகைய அவுடதத்தை விற்பனை செய்தலாகாது.''

(3) அதன் 5அ ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும்:-

''5ஆ. அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்களின் ஏதேனும் மருந்தின் தன்மை அல்லது வீரியம் அத்தகைய அட்டவணையில் குறித்துரைக்கப்படாதவிடத்து, அவ்வாறு குறித்துரைக்கப்படாத மருந்தின் தன்மை அல்லது வீரியத்துக்குமான அதிகபட்ச விலையின் வரையறை, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்படவேண்டிய அதிகபட்ச சில்லறை விலையின் வரையறையாகவிருத்தல் வேண்டும்.''.

(4) அதன் 10 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலமும்:-

''11. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-

''மருத்துவ தொழிலர் என்பது (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ளதான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

''தனியார் மருத்துவ நிறுவனம்'' என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுச்) சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.''.

(5) அட்டவணையை ''பாகம் I'' என மீளப்பெயர் குறிப்பதன் மூலமும்.

(6) அதன் மீளப்பெயர் குறிக்கப்பட்ட ''பாகம் I'' அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் ''பாகம் II'' அட்டவணையை உட்புகுத்துவதன் மூலமும்:-

**அட்டவணை**

**பாகம் II**

***தெரிவுசெய்யப்பட்ட பதின்மூன்று மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலைகள்***

| *நிரல் I* | *நிரல் II* *இனப்பெயர்* (**Generic names**) | *நிரல் III* *மருந்தின் தன்மை* (***Dosage Form***) | *நிரல் IV* *வீரியம்* (**Strength**) | *நிரல் V* *அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா)* |
|---|---|---|---|---|
| 1 | செப்டசிடிம் | ஊசி மருந்து | 500 மி.கி. | 480.00 |
| | செப்டசிடிம் | ஊசி மருந்து | 1 கி. | 800.00 |
| | | | | |
| 2 | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 250 மி.கி. | 240.00 |
| | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 500 மி.கி. | 450.00 |
| | செப்ரியக்சோன் | ஊசி மருந்து | 1 கி. | 700.00 |
| | | | | |
| 3 | செபோடக்சிம் | ஊசி மருந்து | 500 மி.கி. | 225.00 |
| | செபோடக்சிம் | ஊசி மருந்து | 1 கி. | 375.00 |
| | | | | |
| 4 | புளுகொனசோல் | வில்லை/மாத்திரை | 50 மி.கி. | 25.00 |
| | புளுகொனசோல் | வில்லை/மாத்திரை | 150 மி.கி. | 45.00 |
| | | | | |
| 5 | இன்சுலின் சொலுபல் ஹியுமன் | ஊசி மருந்து | 100 ஐ.யு./1 மி.லீ. (10 மி.லீ. குப்பி) | 1200.00 |
| | இன்சுலின் சொலுபல் ஹியுமன் | ஊசி மருந்து | 100 ஐ.யு./1 மி.லீ. (3 மி.லீ. காட்ரிட்ஜ்) | 600.00 |

| நிரல் I | நிரல் II இனப்பெயர் (Generic names) | நிரல் III மருந்தின் தன்மை (Dosage Form) | நிரல் IV வீரியம் (Strength) | நிரல் V அதிகபட்ச சில்லறை விலை (இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| | இன்சுலின் ஐசொபேன் ஹியுமன் | ஊசி மருந்து | 100 ஐ.யு./1 மி.லீ. (10 மி.லீ. குப்பி) | 1200.00 |
| | இன்சுலின் ஐசொபேன் ஹியுமன் | ஊசி மருந்து | 100 ஐ.யு./1 மி.லீ. (3 மி.லீ. காட்ரிட்ஜ்) | 600.00 |
| | பைபேசிக் ஐசொபேன் இன்சுலின் (இன்சுலின் சொலுபல் ஹியுமன் 30 ஐ.யு./1 மி.லீ., இன்சுலின் ஐசொபேன் ஹியுமன் 70 ஐ.யு./1 மி.லீ. கலவையாக) | ஊசி மருந்து | 100 ஐ.யு./1 மி.லீ. (3 மி.லீ. குப்பி) | 1200.00 |
| | பைபேசிக் ஐசொபேன் இன்சுலின் (இன்சுலின் சொலுபல் ஹியுமன் 30 ஐ.யு./1 மி.லீ., இன்சுலின் ஐசொபேன் ஹியுமன் 70 ஐ.யு./1 மி.லீ. கலவையாக) | ஊசி மருந்து | 100 ஐ.யு./1 மி.லீ. (3 மி.லீ. காட்ரிட்ஜ்) | 600.00 |
| | | | | |
| 6 | கிலிமிபிரைட் | மாத்திரை | 1 மி.கி. | 7.15 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை | 2 மி.கி. | 10.15 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை | 3 மி.கி. | 17.00 |
| | கிலிமிபிரைட் | மாத்திரை | 4 மி.கி. | 18.50 |
| | | | | |
| 7 | சிடாக்லிப்டின் | மாத்திரை | 25 மி.கி. | 15.00 |
| | சிடாக்லிப்டின் | மாத்திரை | 50 மி.கி. | 28.50 |
| | சிடாக்லிப்டின் | மாத்திரை | 100 மி.கி. | 48.50 |
| | | | | |
| 8 | டம்சுலோசின் | வில்லை/மாத்திரை | 0.40 மி.கி. | 21.00 |
| | | | | |
| 9 | மொன்டிலூகாஸ்ட் | மாத்திரை | 4 மி.கி. | 12.00 |
| | மொன்டிலூகாஸ்ட் | மாத்திரை | 5 மி.கி. | 15.00 |
| | மொன்டிலூகாஸ்ட் | மாத்திரை | 10 மி.கி. | 21.00 |
| | | | | |
| 10 | பிரீகபலின் | வில்லை/மாத்திரை | 50 மி.கி. | 12.25 |
| | பிரீகபலின் | வில்லை/மாத்திரை | 75 மி.கி. | 15.50 |
| | பிரீகபலின் | வில்லை/மாத்திரை | 100 மி.கி. | 19.25 |
| | பிரீகபலின் | வில்லை/மாத்திரை | 150 மி.கி. | 24.00 |
| | பிரீகபலின் | வில்லை/மாத்திரை | 300 மி.கி. | 39.50 |
| | | | | |
| 11 | டொபிரமேட் | வில்லை/மாத்திரை | 25 மி.கி. | 20.00 |
| | டொபிரமேட் | வில்லை/மாத்திரை | 50 மி.கி. | 32.00 |
| | டொபிரமேட் | வில்லை/மாத்திரை | 100 மி.கி. | 52.00 |
| | | | | |
| 12 | லமோட்ரிஜீன் | மாத்திரை | 25 மி.கி. | 12.00 |
| | லமோட்ரிஜீன் | மாத்திரை | 50 மி.கி. | 21.00 |
| | லமோட்ரிஜீன் | மாத்திரை | 100 மி.கி. | 35.00 |
| | | | | |
| 13 | அட்டோர்வாஸ்ட்டடின் | மாத்திரை | 5 மி.கி. | 6.75 |
| | அட்டோர்வாஸ்ட்டடின் | மாத்திரை | 40 மி.கி. | 26.00 |

*ச.வ.பி. 9/2016*

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம், 118 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
2018, ஓகத்து 29.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் மருந்துகள் (கேள்விப்பத்திர விலைகுறித்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட அவுடதங்களின் (இதனகத்துப்பின்னர் "அ.கே.வி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதிகபட்சக் கேள்விப்பத்திர விலைகளைத் தீர்மானிப்பதற்கு அதிகபட்ச விலை வரையறையொன்று இருத்தல் வேண்டும்.

3. அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்கள் தொடர்பில் அ.கே.வி வரையறைகள், அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்களின் எல்லா வணிகப்பெயர்களுக்கும் (Brand names), இனப்பெயர்களுக்கும் (Generic names), மருந்தின் தன்மைகளுக்கும் (Dosage froms), வீரியங்களுக்கும் (Strengths) ஏற்புடையற்பாலனவாதலும் வேண்டும்.

4.உற்பத்தியாளர்,இறக்குமதியாளர்,வியாபாரி,விநியோகிப்பாளர் ஆகிய எவரும்,அல்லது வேறெவரேனுமாள்,இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் தேதியன்றும் அத்தேதிக்குப்பின்னரும் அட்டவணையின் நிரை V இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதிகபட்சக் கேள்விப்பத்திர விலைக்குமேலான விலையொன்றுக்காக அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதத்தின் ஏதேனும் பெறுகைக்கான விலைகூறலை இடுதலாகாது அல்லது வேறேதேனும் அவசரகாலக் கொள்வனவுக்காக விலைக்கேள்வியை அளித்தலாகாது.

5. அரசாங்கஞ்சார் அல்லது பகுதியளவில் அரசாங்கஞ்சார் நிறுவனமெதுவும், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் தேதியன்றும் அத்தேதிக்குப் பின்னரும் அட்டவணையின் நிரை V இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதிகபட்சக் கேள்விப்பத்திர விலைக்குமேலான விலையொன்றுக்காக அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதத்தின் ஏதேனும் கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளுதலாகாது அல்லது ஏதேனும் அவசரகாலக் கொள்வனவைச் செய்தலாகாது.

6. பெறுகை அல்லது அவசரக் கொள்வனவு நோக்கத்துக்காக, அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்களின் ஏதேனும் மருந்தின் தன்மை அல்லது வீரியம் அத்தகைய அட்டவணையிற் குறித்துரைக்கப்படாதவிடத்து, அத்தகைய மருந்தின் தன்மைகளுக்கும் வீரியங்களுக்குமான அதிகபட்ச விலையின் வரையறை, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

7. முற்போந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறாக அட்டவணைப்படுத்தப்பட்ட அவுடதங்களின் அத்தகைய ஒவ்வோர் அலகினதும் அதிகபட்சக் கேள்விப்பத்திர விலை மீளாயப்படும்வரை இவ்வொழுங்குவிதிகளின் நடைமுறைத் தேதியன்றும் அத்தேதிக்குப்பின்னரும் பயனுறுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் அல்லது ஏதேனும் நிறுவனம் 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் அல்லது புரிகின்றது என்பதுடன் சொல்லப்பட்ட சட்டத்தின் பாகம் IV இன்கீழ் விளங்கப்படற்பாலவராதலும் விளங்கப்படற்பாலதாதலும் வேண்டும்.

**அட்டவணை**

*தெரிவு செய்யப்பட்டுள்ள பத்து மருந்துகளின் அதிகபட்சக் கேள்விப்பத்திர விலைகள்*

| நிரல் I | நிரல் II<br>இனப்பெயர்<br>(Generic names) | நிரல் III<br>மருந்தின் தன்மை<br>(Dosage Form) | நிரல் IV<br>வீரியம்<br>(Strength) | நிரல் V<br>அதிகபட்ச கேள்விப் பத்திர விலை<br>(இலங்கை ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | டிரஸ்டுசுமப் | ஊசி மருந்து | 150 மி.கி. | 32,390.00 |
| | டிரஸ்டுசுமப் | ஊசி மருந்து | 440 மி.கி. | 95,000.00 |
| | | | | |
| 2 | பெவசிசுமப் | ஊசி மருந்து | 100 மி.கி./ 4 மி.லீ. | 35,000.00 |
| | | | | |
| 3 | ரிடுக்சிமப் | ஊசி மருந்து | 100 மி.கி./ 10 மி.லீ. | 11,000.00 |
| | ரிடுக்சிமப் | ஊசி மருந்து | 500 மி.கி./50 மி.லீ. | 55,000.00 |
| | | | | |
| 4 | மைகொபினொலேட் மொபரில் | வில்லை/மாத்திரை | 500 மி.கி. | 15.00 |
| | | | | |
| 5 | பெக்அஸ்பரஜினேஸ் (பெக்அஸ்பார்கேஸ்) | ஊசி மருந்து | 3750 ஐ.யு. | 140,000.00 |
| | | | | |
| 6 | பெமிட்ரெக்ஸெட் டைசோடியம் | ஊசி மருந்து | 100 மி.கி. | 3,120.00 |
| | பெமிட்ரெக்ஸெட் டைசோடியம் | ஊசி மருந்து | 500 மி.கி. | 15,600.00 |
| | | | | |
| 7 | போர்டெசோமிப் | ஊசி மருந்து | 2 மி.கி. | 14,500.00 |
| | | | | |
| 8 | பெக்இன்டர்பெரோன் அல்பா 2அ | ஊசி மருந்து | 180 மைக்ரோ.கி. | 27,700.00 |
| | | | | |
| 9 | அபிரடெரோன் அசடேட் | மாத்திரை | 250 மி.கி. | 275.00 |
| | | | | |
| 10 | பெக்பில்கிரஸ்டிம் | ஊசி மருந்து | 6 மி.கி./0.6 மி.லீ,<br>6 மி.கி./1 மி.லீ. | 22,000.00 |

9-322/2

---

ச.வ.பி. 9/2016

**2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்**

*2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 3 ஆம், 118 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின்கீழ் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

வைத்திய கலாநிதி ராஜித சேனாரட்ன,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர்.

கொழும்பு,
2018, ஓகத்து 29.

## ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2018 ஆம் ஆண்டின் மருத்துவ உபகரணங்கள் விலைகுறித்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, வழங்குநர், மருந்தாளர், மருத்துவ தொழிலர் எவரும், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது மருத்துவ உபகரணங்களை உடைமையில் கொண்டுள்ளவரான ஆள் எவரும் வணிகப் பெயர் (Brand name), அங்கீகரிக்கப்பட்ட பெயர்(Approved name), மாதிரிகள்(Models), அளவுகள் (Sizes) மற்றும் பொதியளவுகளினால் (Pack sizes) விபரிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதுமான ஏதேனும் மருத்துவ உபகரணத்தை அதனகத்து விதிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைக்கு (அ.சி.வி) அதிகமாக விற்றலோ, விற்பனைக்கு முனைதலோ அல்லது விதிப்பனவு செய்தலோ ஆகாது.

3. இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதான தற்போது சொல்லப்பட்ட மருத்துவ உபகரணத்தை இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள அதிகபட்ச சில்லறை விலையை விட குறைவான விலையில் விற்பனை செய்கின்ற உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, வழங்குநர், மருந்தாளர், மருத்துவத் தொழிலர், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது மருத்துவ உபகரணங்களை உடமையில் கொண்டுள்ளவரான ஆள், ஏதேனும் விலை அதிகரிப்பின்றி ஏலவேயுள்ள விலையைப் பேணுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

4. அதனது வணிகப்பெயர், அங்கீகரிக்கப்பட்ட பெயர், மாதிரிகள், அளவுகள் மற்றும் பொதியளவுகளினால் விபரிக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதுமான ஏதேனும் மருத்துவ உபகரணத்தை விற்பனை செய்கின்ற அல்லது விற்பனைக்கு முனைகின்ற அல்லது விதிப்பனவு செய்கின்றவரான 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் அல்லது நிறுவனம் ஒவ்வொன்றும் அத்தகைய மருத்துவ உபகரணத்தின் வணிகப்பெயர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பெயர், பொதியளவு மற்றும் விலை என்பவற்றை தனிவேறான விடயமாக தெளிவாக சுட்டிக்காட்டுகின்ற பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும்.

5. விற்பனைக்காக உற்பத்திசெய்யப்பட்ட அல்லது கிடைக்கக்கூடியதான அத்தகைய மருத்துவ உபகரணத்தின் இருப்பிலுள்ள ஒவ்வோர் விடய அலகினதும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான இயைபான அதிகபட்ச சில்லறை விலை இவ்வொழுங்குவிதிகளின் வெளியீட்டுத்தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்கள் எனும் காலப்பகுதியொன்று முடிவுறுவதற்கு முன்னர், செயல்முறைக்குகந்தவரை விரைவாக அவற்றின் முறையே வர்த்தகப் பொதியிடுகையில் அல்லது சுட்டுத்துண்டிடுகையில் அச்சிடப்படுதல் வேண்டும் அல்லது அடையாளமிடப்படுதல் வேண்டும்.

6. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்றவரான எவரேனும் உற்பத்தியாளர், இறக்குமதியாளர், விநியோகிப்பாளர், வியாபாரி, வழங்குநர், மருந்தாளர், மருத்துவத் தொழிலர், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது அத்தகைய மருத்துவ உபகரணங்களை உடமையில் கொண்டுள்ள ஆளொருவர், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் IV ஆம் பாகத்தின் கீழ் விளங்கப்படற்பாலவராதலும் வேண்டும்.

7. இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையை ஒவ்வொரு சில்லறை விற்பனை நிலையத்திலும் காட்சிப்படுத்துதல் ஒவ்வோர் உற்பத்தியாளரினதும், இறக்குமதியாளரினதும், விநியோகிப்பாளரினதும், வியாபாரியினதும், வழங்குநரினதும், மருந்தாளரினதும், மருத்துவத் தொழிலரினதும், தனியார் மருத்துவ நிறுவனம் உட்பட்ட ஏதேனும் ஒரு மருத்துவ நிறுவனம் அல்லது அத்தகைய மருத்துவ உபகரணங்களை உடமையில் கொண்டுள்ள ஆள் ஒருவரினதும் கடமையாதல் வேண்டும்.

8. அத்தகைய மருத்துவ உபகரணங்களின் எவையேனும் வணிகப்பெயர், மாதிரிகள், அளவுகள் மற்றும் பொதியளவுகள் அட்டவணையில் குறித்துரைக்கப்படாதவிடத்து அவை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையினால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

9. இவ்வொழுங்குவிதிகளில் -

"மருத்துவத் தொழிலர்" என்பது, (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"தனியார் மருத்துவ நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்கள் (பதிவுச்) சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை**

***தெரிவுசெய்யப்பட்ட இரண்டு மருத்துவ உபகரணங்களின் ஆகக்கூடிய சில்லறை விலைகள்***

| *நிரல் I* | *நிரல் II*<br>*வணிகப் பெயர் (Brand name)/*<br>*அங்கீகரிக்கப்பட்ட பெயர் (Approved name)* | *நிரல் III*<br>*அ.சி.வி.*<br>*(இலங்கை ரூபா)* |
|---|---|---|
| *1* | இரத்த குளுக்கோசு அளவீடு மானி | 2,750.00<br>ஓர் அலகுக்கு |
| *2* | இரத்த குளுக்கோசு அளவீடு மானிக்கான சோதனைக் கீற்றுகள் | 50.00<br>ஒரு கீற்றுக்கு |

*9 - 322/3*